# QB365 Question Bank Software Study Material

## பொருளியல் - மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி: ஓர் அறிமுகம் முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 10ம் வகுப்பு
## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) நாட்டு வருமானம்- வரையறு

**பதில் :** நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

2) மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

**பதில் :** ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகளின்) மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

3) GDPயின் முக்கியத்துவத்தை எழுதுக.

**பதில் : GDP யின் முக்கியத்துவம்:**
1. பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகிறது.
2. பணவீக்கம் மற்றும் பண வாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.
3. உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்குப் பயன்படுகிறது.
4. வாங்கும் திறன் மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.
5. பொதுத்துறை பற்றி அனைவரும் தெரிந்துகொள்ள பயன்படுகிறது.
6. பொருளாதாரத் திட்டமிட வழிகாட்டியாகவும் பயன்படுகிறது.

4) தனி நபர் வருமானம் என்றால் என்ன?

**பதில் :** 1. தனிநபர் வருமானம் (தலா வருமானம்) என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
2. நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் தனிநபர் வருமானம் (தலா வருமானம்) பெறப்படுகிறது.
தனிநபர் வருமானம் (தலா வருமானம்) = நாட்டு வருமானம்/மக்கள் தொகை

5) மதிப்பு கூட்டுமுறையை எடுத்துக்காட்டுடன் வரையறு

**பதில் :** 1. மதிப்புக் கூட்டு முறையில், ஒவ்வொரு இடைநிலைப் பண்டத்தின் மதிப்பைக் கூட்டினால், இறுதிப் பண்டத்தின் மதிப்பை அடையலாம்.
2. உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலைப் பண்டங்களின் மதிப்பைச் சேர்க்கும் பொழுது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பு கிடைக்கிறது.
எடுத்துக்காட்டு : டீ தூள் + பால் + சர்க்கரை / இடைநிலைப் பண்டங்களின் மதிப்பு = தேநீர்/இறுதிப்பண்டத்தின் மதிப்பு

6) இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.

**பதில் :** 1. வேளாண் கொள்கை
2. தொழில் துறைக் கொள்கை
3. புதிய பொருளாதாரக் கொள்கை
4. இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கொள்கை (சர்வதேச வர்த்தகக் கொள்கை)

7) சிறு குறிப்பு வரைக.
1) மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH)
2) மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI)

**பதில் : GNH (மொத்த தேசிய மகிழ்ச்சி)**
(GNH) என்பது அரசாங்கத்தை வழி நடத்தும் ஒரு தத்துவமாகும். அது ஒரு மக்கள் தொகை கூட்டு மகிழ்ச்சி மற்றும் நல்வாழ்வை அளவிடப் பயன்படும் குறியீட்டை உள்ளடக்கியது.
GNH என்ற வார்த்தையை 1972ல் உருவாக்கியவர் ஜிகமே சிங்கயே வாங்ஹக் என்ற பூட்டான் அரசர் ஆவார். அவர் GNP

-ஐ விட GNH முக்கியம் என்றார்.

**GNH ன் நான்கு தூண்கள்:**

1. நிலையான மற்றும் சமமான சமூக பொருளாதார வளர்ச்சி
2. சுற்றுச்சூழல் பாதுகாப்பு
3. கலாசாரத்தை பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவது
4. நல்ல ஆட்சி.

**GNHH ன் ஒன்பது களங்கள்: (domains)**

1. உளவியல் நலன்
2. உடல் நலம்
3. நேரம் பயன்பாடு
4. கல்வி
5. கலாச்சார பன்முகத் தன்மை மற்றும் பின்னடைவு
6. நல்ல ஆட்சி
7. சமூகத்தின் உயர்வு
8. சுற்றுச்சூழல் பன்முகத் தன்மை மற்றும் பின்னடைவு
9. வாழ்க்கைத் தரம்

**HDI : (மனித மேம்பாட்டுக் குறியீடு)**

1. பொருளாதாரத்தின் உண்மையான முன்னேற்றத்தை அளப்பதற்கு மனிதவள மேம்பாட்டு குறியீடு (HDI) சரியானதாகும்.
2. இது 1990 ஆம் ஆண்டு முகஹப்-உல் ஹிக் என்ற பாகிஸ்தான் பொருளியல் அறிஞரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
3. பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு, வயது வந்தோரின் கல்வியறிவு மற்றும் வாழ்க்கைத்தரம், GDP மடக்கை செயல்பாடு என கணக்கிடப்பட்டு வாங்கும் சக்தி சமநிலைக்கு (PPP) சரி செய்யப்படுகிறது.

8) GDP மற்றும் GNP வேறுபடுத்துக.

**பதில் :** (i) ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்ப்படுகின்ற பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP).
(ii) விலை அளவுகள் மாறும்போது GNP மாற்றம் ஏற்படும்.
(iii) நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்று பணிகளின் மொத்த மதிப்பாகும்.

9) மொத்த உள்நாட்டு உற்பத்தியான மூன்று கணக்கிட்டு முறைகள் பற்றி எழுதவும்.

**பதில் :** (i) முதன்மைத்துறை (விவசாயதுறை)
(ii) இரண்டாம்துறை (தொழில்துறை)
(iii) மூன்றாம் துறை (பணிகள் துறை)

10) மொத்த நாட்டு உற்பத்தி (GNP) - வரையறு

**பதில் :** மொத்த நாட்டு உற்பத்தி எனப்து அந்த நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள்+பணிகள்) மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

11) மொத்த மதிப்பு கூடுதல் (GVA) என்றால் என்ன?

**பதில் :** ஒரு பொருளாதாரத்தில் ஒரு பகுதி தொழில் அல்லது துறையில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பே மொத்த மதிப்பு கூடுதல் (GVA) ஆகும்.

12) பொருளாதார குறியீடு என்றால் என்ன?

**பதில் :** நாட்டின் பொருளாதார நிலையை குறிக்கும் புள்ளி விவர தரவுகளை பொருளாதார குறியீடு என்கிறோம்.

13) இறுதிநிலைப் பண்டங்கள் மற்றும் பணிகள் என்றால் என்ன?

**பதில் :** 1. இறுதிநிலை பண்டங்கள் மற்றும் பணிகள் என்பது நுகர்வுக்காக அல்லது பயன்பாட்டுக்காக உள்ள பண்டங்கள் மற்றும் பணிகளாகும்.
2. பண்டங்கள் என்பது தொடக்கூடிய பொருட்களாகும்
3. பணிகள் என்பது தொட்டு உணர முடியாத நடவடிக்கைகளாகும்.

14) நிகர நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

**பதில் :** மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கியபின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்
நிகர நாட்டு உற்பத்தி (NNP)= மொத்த நாட்டு உற்பத்தி (GNP) - தேய்மானம் ஆகும்.

15) நிகர உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?

**பதில் :** 1. நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும்
2. மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தை (தேய்மான செலவின் அளவு) கழித்தபின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.
NDP = GDP - தேய்மானம்

**5 மதிப்பெண் வினாக்கள்** 4 x 5 = 20

16) நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி?

**பதில் :** நாட்டு வருமானத்தைக் கணக்கிடும் கருத்துக்கள்:
1. மொத்த நாட்டு உற்பத்தி (GNI)
2. மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
3. நிகர நாட்டு உற்பத்தி (NNP)
4. நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP)
5. தலா வருமானம் (PCT)
6. தனிப்பட்ட வருமானம் (PI)
7. செலவிடத்தகுதியான வருமானம் (DI)

**மொத்த நாட்டு உற்பத்தி (GNP):**
1. மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும்.
2. வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

**மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)**
ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்திக் காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மொத்த மதிப்பே உள்நாட்டு உற்பத்தியாகும்.

**நிகர நாட்டு உற்பத்தி (NNP):**
மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கியபின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.
நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP) - தேய்மானம்.

**நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP):**
நிகர உள்நாட்டு உற்பத்தி என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் ஒரு பகுதியாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் (தேய்மான செலவின் அளவு) கழித்தபின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.
நிகர உள்நாட்டு உற்பத்தி (NDI) = மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDI) - தேய்மானம்.

**தலா வருமானம் அல்லது தனிநபர் வருமானம் (CI)**
தலா வருமானம் என்பது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.
நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுப்பதன் மூலம் தலா வருமானம் பெறப்படுகிறது.
தலா வருமானம் = நாட்டு வருமானம்/மக்கள் தொகை

**தனிப்பட்ட வருமானம் (PI):**
நேர்முக வரிவிதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒரு நாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்தும் பெறப்படுகின்ற மொத்த பண வருமானத்தைத் தளிப்பட்ட வருமானம் என்கிறோம்.

**செலவிடத் தகுதியான வருமானம் (DI):**
தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானத்தை செலவிட தகுதியான வருமானம் என்கிறோம்.

17) பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளைக் கூறுக.

பதில் :

| வ.எண் | பொருளாதார வளர்ச்சி முன்னற்றம் ஒப்பீடு | பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னற்றம் |
|---|---|---|---|
| (i) | கருத்து | பொருளாதாரா வளர்ச்சி ஒரு குறுகிய கருத்து | பொருளாதார முன்னேற்றம் ஒரு பரந்த கருத்து |
| (ii) | வரையறை/ பொருள் | ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பொருளாதாரத்தில் வெளியீட்டில் இது நேர்மறை அளவு மாற்றத்தைக் கொடுக்கும் | இது பொருளாதாரத்தில் வெளியீட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு.HDI யின் குறியீட்டின் முன்னேற்றம் மற்றும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீட்டைக் கருதுகிறது. |
| (iii) | அணுகுமுறை | அளவின் இயல்பு | தரத்தின் இயல்பு |
| | நோக்கம் | GDP, GNP, FDI,FII போன்ற அளவுகள் அதிகரிக்கும். | வாழ்க்கை எதிர்பார்ப்பு விகிதம், குழந்தை எழுத்தறிவு விகிதம் மற்றும் வறுமை விகிதத்தில் முன்னேற்றம் |
| (iv) | கால வரம்பு | இயற்கையில் குறுகிய காலத்தை உடையது. | இயற்கையில் நீண்ட காலத்தை உடையது. |
| (v) | பொருந்தும் தன்மை | வளர்ந்த நாடுகள் | வளர்ந்து வருகின்ற நாடுகள் |
| (vi) | அளவீட்டு நுட்பங்கள் | நாட்டு வருமானத்தை அதிகரித்தல் | உண்மையான நாட்டு வருமானத்தை அதிகரித்தல், அதாவது, தனிநபர் வருமானம் போன்றவை. |
| (vii) | நிகழ்வின் அதிர்வெண் | ஒரு குறிப்பிட்ட காலம் | தொடர்ச்சியான செயல்முறை |
| (viii) | அரசாங்க உதவி | இது ஒரு தானியங்கி செயல்முறையாகும். எனவே, அரசாங்க உதவி/ ஆதரவு அல்லது தலையீடு தேவைப்படாது. | அரசாங்க தலையீட்டை மிகவும் நம்பியுள்ளது. இது பரந்த கொள்கை மாற்றங்களை உள்ளடக்கியுள்ளது. எனவே அரசாங்கத் தலையீடு இல்லாமல் அது சாத்தியமே இல்லை. |
| | | | இது ஒரு சம நிலையில் கவனம் |

| | | | |
|---|---|---|---|
| | | | நிலையில் கவனம் செலுத்துகிறது. |
| (ix) | செல்வ பகிர்வு | பொருளாதார வளர்ச்சி அனைத்து மக்களிடையேயும் செல்வம் வருமானத்தை நியாயமாக மற்றும் சமமாக விநியோகிக்கப்படுவதில்லை. | அனைத்து தனிநபர்களிடையே செல்வத்தை சமமாக விநியோகிப்பது சமூகங்களை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கிறது. |

18) கீழ்கண்ட பொருளாதார கொள்கைகளை விவரி?

1) விவசாய கொள்கை **(வேளாண் கொள்கை)**

2) தொழிற் கொள்கை

3) புதிய பொருளாதார கொள்கை

**பதில் : விவசாயக் கொள்கை (வேளாண் கொள்கை):**

உள்நாட்டு வேளாண்மை மற்றும் வெளிநாட்டு வேளாண்மை, இறக்குமதி பொருட்கள் பற்றிய அரசின் முடிவுகளையும், நடவடிக்கைகளையும் பற்றியது வேளாண் கொள்கையாகும்.

**முக்கிய வேளாண் கொள்கைகள்:**

1. விலைக் கொள்கை
2. நிலச்சீர்த்திருத்தக் கொள்கை
3. பசுமைப்புரட்சி
4. பாசனக் கொள்கை
5. உணவுக் கொள்கை
6. விவசாயத் தொழிலாளர் கொள்கை
7. கூட்டுறவுக் கொள்கை

**தொழில் கொள்கை:**

1. தொழில் துறை முன்னேற்றம் எந்த ஒரு பொருளாதார முன்னேற்றத்திற்கும் முக்கியமான அம்சமாகும்.
2. இது வேலைவாய்ப்பை உருவாக்குகிறது.
3. இதனால் நவீனமயமாக்கலுக்கு வழிவகுக்கப்பட்டு இறுதியில் பொருளாதாரம் தன்னிறைவு அடைகிறது.
4. உண்மையில், தொழில்துறை வளர்ச்சி, விவசாயத்துறை மற்றும் பணிகள் துறை போன்ற துறைகளை ஊக்குவிக்கின்றன. இது பொருளாதார வர்த்தக வளர்ச்சிக்கு முக்கியப் பங்கு வகிக்கிறது.

**முக்கியக் கொள்கைகள்:**

1. ஜவுளித் தொழில் கொள்கை
2. சர்க்கரைத் தொழில் கொள்கை
3. தொழில் துறை வளர்ச்சி விலைக் கொள்கை
4. சிறுதொழில் தொழில் கொள்கை
5. தொழில் துறை தொழிலாளர் கொள்கை.

**புதிய பொருளாதாரக் கொள்கை:**

1. இந்தப் புதிய பொருளாதார சீர்த்திருத்தம் பொதுவாக L.PG, அல்லது தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல், மற்றும் உலக மயமாக்கல் மாதிரி என அழைக்கப்படுகிறது.
2. இந்த பொருளாதார சீர்திருத்தங்கள் நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை ஒரு குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றமடையச் செய்தது.

19) இந்தியாவில் GDP யில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி?

பதில் : **GDPயின் துறைகள்:**

1. முதன்மைத் துறை (விவசாயத் துறை)
2. இரண்டாம் துறை (தொழில் துறை)
3. மூன்றாம் துறை (பணிகள் துறை)

**முதன்மைத்துறை:**

1. வேளாண்மைத் துறையை முதன்மைத் துறை எனவும் அழைக்கலாம். இதில் வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் விவசாய நடவடிக்கைகள் அடங்கும்.
2. இவை, கால்நடை பண்ணைகள், மீன்பிடித்தல், சுரங்கங்கள், காடுகள் வளர்த்தல், சோளம், நிலக்கரி போன்ற மூலப்பொருட்களை உற்பத்தி செய்கிறது.

**இரண்டாம் துறை:**

1. தொழில் துறையை இரண்டாம் துறை எனவும் அழைக்கலாம். மூலப்பொருட்களை மாற்றியமைப்பதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
2. இரும்பு மற்றும் எஃகு தொழில், ஐவுளித் தொழில், சணல், சர்க்கரை, சிமெண்ட், காகிதம், பெட்ரோலியம், ஆட்டோ மொபைல்ஸ் மற்றும் பிற சிறுதொழில்கள் ஆகியன முக்கியத் தொழில்களாகும்.

**மூன்றாம் துறை:**

1. பணிகள் துறையை மூன்றாம் துறை எனவும் அழைக்கலாம்.
2. அவை அரசு, அறிவியல் ஆராய்ச்சி, போக்குவரத்து, தகவல் தொடர்பு, வர்த்தகம், தபால் மற்றும் தந்தி, வங்கி, கல்வி, பொழுதுபோக்கு, சுகாதாரம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் போன்றவைகளாகும்.